# ஏப்ரல் - 14- புனித வெள்ளி

### ஆண்டவர் இயேசுவின் திரு மரண நினைவு
### ஒரு சந்தி - மாமிசத் தவிர்ப்பு

**நானோ, பயனற்ற சிலைகளில் பற்றுடையோரை வெறுத்து, ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன். திபா. 31:6**

## முதல் வாசகம் : ஏசாயா 52 : 13 --- 53 : 12

இதோ, என் ஊழியர் சிறப்படைவார் அவர் மேன்மைப்படுத்தப்பட்டு, உயர்த்தப்பட்டு, பெரிதும் மாட்சியுறுவார். அவரைக் கண்ட பலர் திகைப்புற்றனர் அவரது தோற்றம் பெரிதும் உருக்குலைந்ததால் மனித சாயலே அவருக்கு இல்லாதிருந்தது மானிடரின் உருவமே அவருக்கு இல்லை. அவ்வாறே, அவர் பல பிறஇனத்தாரை அதிர்ச்சிக்குள்ளாக்குவார் அரசர்களும் அவரை முன்னிட்டு வாய்பொத்தி நிற்பர் ஏனெனில் தங்களுக்குச் சொல்லப் படாததை அவர்கள் காண்பர் தாங்கள் கேள்விப்படாததை அவர்கள் புரிந்து கொள்வர். நாங்கள் அறிவித்ததை நம்பியவர் யார்? ஆண்டவரின் ஆற்றல் யாருக்கு வெளிப்படுத்தப்பட்டது? இளந்தளிர்போலும் வறண்டநில வேர்போலும் ஆண்டவர் முன்னிலையில் அவர் வளர்ந்தார் நாம் பார்ப்பதற்கேற்ற அமைப்போ அவருக்கில்லை நாம் விரும்பத்தக்க தோற்றமும் அவருக்கில்லை. அவர் இகழப்பட்டார் மனிதரால் புறக்கணிக்கப்பட்டார் வேதனையுற்ற மனிதராய் இருந்தார் நோயுற்று நலிந்தார் காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார் அவர் இழிவுபடுத்தப்பட்டார் அவரை நாம் மதிக்கவில்லை. மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார் நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார் நாமோ அவர் கடவுளால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டவர் என்றும் சிறுமைப் படுத்தப்பட்டவர் என்றும் எண்ணினோம். அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார் நம்தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார் நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார் அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம். ஆடுகளைப் போல நாம் அனைவரும் வழிதவறி அலைந்தோம் நாம் எல்லாரும் நம் வழியே நடந்தோம் ஆண்டவரோ நம் அனைவரின் தீச்செயல்களையும் அவர்மேல் சுமத்தினார். அவர் ஒடுக்கப்பட்டார் சிறுமைப்படுத்தப்பட்டார் ஆயினும், அவர் தம் வாயைத் திறக்கவில்லை அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார். அவர் கைது செய்யப்பட்டு, தீர்ப்பிடப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டார் அவருக்கு நேர்ந்ததைப்பற்றி அக்கறை கொண்டவர் யார்? ஏனெனில், வாழ்வோர் உலகினின்று அவர் அகற்றப்பட்டார் என் மக்களின் குற்றத்தை முன்னிட்டுக் கொலையுண்டார். வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை ஆயினும், தீயவரிடையே அவருக்குக் கல்லறை அமைத்தார்கள் செத்தபோது அவர் செல்வரோடு இருந்தார். அவரை நொறுக்கவும் நோயால் வதைக்கவும் ஆண்டவர் திருவுளம் கொண்டார் அவர் தம் உயிரைக் குற்றநீக்கப்பலியாகத் தந்தார் எனவே, தம் வழிமரபு கண்டு நீடு வாழ்வார் ஆண்டவரின் திருவுளம் அவர் கையில் சிறப்புறும். அவர் தம் துன்ப வாழ்வின் பயனைக் கண்டு நிறைவடைவார் நேரியவராகிய என் ஊழியர் தம் அறிவால் பலரை நேர்மையாளராக்குவார் அவர்களின் தீச்செயல் களைத் தாமே சுமந்து கொள்வார். ஆதலால், நான் அவருக்கு மதிப்பு மிக்கவரிடையே சிறப்பளிப்பேன் அவரும் வலியவரோடு கொள்ளைப் பொருளைப் பங்கிடுவார் ஏனெனில், அவர் தம்மையே சாவுக்கு கையளித்தார் கொடியவருள் ஒருவராகக் கருதப்பட்டார் ஆயினும் பலரின் பாவத்தைச் சுமந்தார் கொடியோருக்காகப் பரிந்து பேசினர்.

**பதில்பாடல் :** தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்

## இரண்டாம் வாசகம் : ஏபிரேயர் 4 : 14 – 16, 5 : 7 – 9

சகோதர சகோதரிகளே, வானங்களைக் கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக்கொள்வோமாக! ஏனெனில், நம் தலைமைக் குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல் மாறாக, எல்லா வகையிலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டவர் எனினும் பாவம் செய்யாதவர்.எனவே, நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக.அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவி சாய்த்தார்.அவர் இறைமகனாயிருந்தும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்.அவர் நிறைவுள்ளவராகி, ”தமக்குத் கீழ்ப்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானர்.

## நற்செய்தி :

## யோவான் 18 : 1 --- 19 : 42 வரை வாசித்துத் தியானிக்கவும்

**தியானம்:** ஆண்டவர் இயேசு தன்னுடைய இன்னுயிரையே தந்தார். அதைத்தான் இன்றைக்கு பாடுகளின் பெரிய வெள்ளியாக நினைவு கூர்ந்து பார்க்கிறோம். இயேசுவின் சிலுவை மரணமும், அவருடைய பாடுகளும் தான் கிறிஸ்தவ வாழ்வின் மையமாக இருக்கிறது. அவர் தனக்காக அல்ல நமக்காக தன்னுடைய இன்னுயிரையே தந்தார். அவர் ஒருவரே நம்முடைய பாவத்திற்காக சிலுவை மரத்தில் கழுவாயானார். நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் அளவு கடந்த அன்பை உணர்ந்து அவருக்கு பிரமாணிக்கமாக இருக்க வேண்டும். அவர் நம்மீது வைத்திருக்கும் அளவு கடந்த அன்பை உணர்ந்து கொண்டு, நாமும் நம்மோடு வாழும் மக்களை அன்பு செய்ய வேண்டும். ஜான் நியூட்டன் என்ற ஆங்கிலக் கவிஞர் ஒரு முறை இவ்வாறு குறிப்பிட்டார்” நான் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பார்க்கின்ற போது அவர் என்னிடம் ”உன்மீது கொண்ட அன்பினால்தான் இப்படி சிலுவையில் அறையப்பட்டுக் கிடக்கிறேன் என்று சொல்வது போன்று இருக்கும் என்பார். தொடர்ந்து அவர் சொல்வார்,”நான் ஒவ்வொரு முறையும் சிலுவையைப் பார்க்கின்ற போது அதிலிருந்து நான் திடம் பெறுகின்றேன். இயேசுவைப் போன்று எல்லாரையும் நிபந்தனை இன்றி அன்பு செய்யவும் அழைக்கப்படுகின்றேன்.” என்பார். ஆகவே, இயேசுவின் பாடுகளை சிறப்பாக நினைவு கூர்ந்து பாரக்கின்ற இந்த வேளையில் நாமும் இயேசுவைப் போன்று எல்லா மக்களையும் அளவு கடந்த விதமாய் அன்பு செய்வோம். இறைவனுக்கு கீழ்படிந்து அவரது திருவுளத்தின்படி நடப்போம். அதன்வழியாக இறை அருளை நிறைவாகப் பெறுவோம்.